# கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள், 2025 யூலையில் தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிலும் மேம்பாடுகளை எடுத்துக்காட்டுகின்றன

**தயாரிப்பிற்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – தயாரிப்பு), 2025 யூலையில் 62.2 ஆக உயர்வான வீதத்தில் அதிகரித்து, தயாரிப்பு நடவடிக்கைகளில் விரிவடைதலினை எடுத்துக்காட்டுகின்றது.** அனைத்து துணைச் சுட்டெண்களும் இம்மேம்பாட்டிற்கு சாதகமாகப் பங்களித்தன.

புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி துணைச் சுட்டெண்களில் அதிகரிப்புக்கு உணவு மற்றும் குடிபானங்கள் தயாரித்தல் அத்துடன் புடவைகள் மற்றும் அணியும் ஆடைத் தயாரிப்பு துறைகளில் வலுவான செயலாற்றம் பெருமளவில் துணையளித்திருந்தது. மேலும், உற்பத்தி மற்றும் புதிய கட்டளைகளின் அதிகரிப்புக்களுக்கிசைவாக தொழில்நிலை துணைச் சுட்டெண் யூலையில் நேர்க்கணியப் புலத்திற்குத் திரும்பலடைந்ததுடன் கொள்வனவுகளின் இருப்பு துணைச் சுட்டெண் மேலும் அதிகரித்தது. அதேவேளை, நிரம்பலர்களின் விநியோக நேரம் மாதகாலப்பகுதியில் நீட்சியடைந்து காணப்பட்டது.

***கொமுசு தொகுப்பு - தயாரிப்பு அளவீடு***

| மாறி | யூன் | யூலை | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு – தயாரிப்பு** | **51.9** | **62.2** | **+** | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| புதிய கட்டளைகள் | 50.5 | 67.5 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| உற்பத்தி | 52.6 | 66.5 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 49.0 | 55.0 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| கொள்வனவுகளின் இருப்பு | 50.5 | 59.5 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 58.2 | 55.6 | - | நீட்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்துவரும் மூன்று மாதங்கள் பற்றி தயாரிப்புத் துறை சாதகமான எண்ணப்பாங்கினைக் கொண்டுள்ள அதேவேளை உலகளாவிய வர்த்தகத்தில் நிச்சயமின்மைகளுக்கு மத்தியில் எச்சரிகைமிக்கதாகவுள்ளது.

**தயாரிப்பு கொ.மு.சு 62.2**

**2025 யூலை**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு தயாரிப்புத் தொகுப்பு

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| **உலகம்** | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| **இந்தியா** | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| **சீனா** | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| **ஐக்கிய அமெரிக்கா** | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| **ஐக்கிய இராச்சியம்** | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| **யூரோ வலயம்** | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2025 ஓகத்து 15 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1]எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொமு சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**பணிகளுக்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – பணிகள்), 2025 யூலையில் 70.1 பெறுமதியைப் பதிவுசெய்து, பணிகள் நடவடிக்கைகளில் துரிதமடைந்த விரிவடைதலை எடுத்துக்காட்டுகின்றது.**

அநேகமான துறைகளுக்கிடையில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகள் மூலம் துணையளிக்கப்பட்டு, 2025 யூலை வியாபார நடவடிக்கைகள் விரிவடைந்தன. அதற்கமைய, மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக வியாபார நடவடிக்கைகள் மாதகாலப்பகுதியில் கணிசமான வளர்ச்சியினை அனுபவித்தன. மேலும், நிதியியல் பணிகளுடன் தொடர்புபட்ட வியாபார நடவடிக்கைகள் கடன்வழங்கல் செயற்பாடுகளில் அதிகரிப்பு அத்துடன் பொருட்கள் கொண்டுசெல்வதுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் என்பன மூலம் தூண்டப்பட்டு தொடர்ச்சியாக மேம்பட்டன. மேலும், ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள், அஞ்சல் நடவடிக்கைகள், செய்நிரலாக்கல் மற்றும் ஒலிபரப்பு, தொலைத்தொடர்பு, தங்குமிடம், உணவு மற்றும் குடிபான பணி நடவடிக்கைகள் மற்றும் மனித ஆரோக்கியம் தொடர்புபட்ட துறைகள் என்பவற்றின் வியாபார நடவடிக்கைகளும் மாதகாலப்பகுதியில் சாதகமான அபிவிருத்திகளைப் பதிவுசெய்தன.

முதன்மையாக மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம் அத்துடன் நிதியியல் பணிகள் துறை என்பவற்றில் அவதானிக்கப்பட்ட விரிவடைதல் காரணமாக புதிய வியாபாரங்கள் 2025 யூலையில் அதிகரித்தன.

பல துறைகளுக்கிடையில் அதிகரிக்கின்ற வியாபார நடவடிக்கை அதிகரிக்கின்ற தொழிற்பாட்டு ரீதியான கேள்விகளை நிறைவுசெய்வதற்கு மேலதிகப் பணியாட்களை ஆட்சேர்ப்பதற்கு கம்பனிகளைத் தூண்டியமையினால் தொழில்நிலை 2025 யூலையில் அதிகரித்தது. அதேவேளை, நிலுவையிலுள்ள பணிகள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் அதிகரித்தன.

***கொமுசு தொகுப்பு - பணிகள் அளவீடு***


| மாறி | யூன் | யூலை | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)** | **61.9** | **70.1** | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| புதிய வியாபாரங்கள் | 62.9 | 64.9 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 51.6 | 59.8 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 50.0 | 51.1 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 75.8 | 80.7 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

சாதகமான பேரண்டப் பொருளாதார நிலைமைகள் மூலம் துணையளிக்கப்பட்டு அடுத்த மூன்று மாதங்களுக்கான வியாபார நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் தொடர்ந்தும் மேம்பட்டுள்ளது.

**கொ.மு.சு**
**பணிகள்**
**வியாபார நடவடிக்கைச் சுட்டெண்**
**2025 யூலை**
**70.1**

கொமுசு - பணிகள்
(வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு பணிகளின் தொகுப்பு

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| இந்தியா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| சீனா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| யூரோ வலயம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2025 ஓகத்து 15 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**முறையியல்**

வினாக்கொத்துக்கள் தொடர்ந்துவருகின்ற மாதத்தின் முதலரையில் நிறைவுசெய்யப்படுகின்றன. ஒவ்வொரு மாறிலிக்காகவும் முன்னைய மாதத்துடன் ஒப்பிட்டு அதிகரிப்பை, வீழ்ச்சியை அல்லது மாற்றமின்மையை அறிக்கையிடுமாறும் ஏதேனும் மாற்றங்களுக்கான காரணங்களை வழங்குமாறும் பதிலிறுப்பாளர்கள் கேட்கப்படுகின்றனர். சுட்டெண் தொகுப்பும் சுட்டிகள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி. குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

**கொமுசு – தயாரித்தல்,** தயாரித்தலுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகக் கருதப்படுகின்ற இது புதிய கட்டளைகள், வெளியீடு, தொழில்நிலை, நிரம்பலர் விநியோக நேரம் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பவற்றின் நிறையேற்றப்பட்ட சராசரியொன்றாகும்.

பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பது, பன்னாட்டு ரீதியான சிறந்த நடத்தைகளுக்கமைவாக பணிகளுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். இது, **கொமுசு – பணிகள்** எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது. பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண்ணுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.